சாட்சிகளின் வாக்குமூலம்
(கு.வி.மு.ச.அத்தியாயம் -23)

**உதவி அமர்வு நீதிமன்றம், பெருந்துறை.**

**அமர்வு வழக்கு எண்: 131/2024**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 10 ம் நாள் அ.சா. 1 ஆக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.எம்.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., உதவி அமர்வு நீதிபதி, பெருந்துறை அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது. பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | சற்குண ராஜா |
| த.க.பெயர் | ராமசாமி |
| கிராமம் | திண்டுக்கல் |
| மாவட்டம் | |
| வயது | 60 |

| ஆஜர் எதிரிகள் | ஆஜரில்லாத எதிரிகள் |
|---|---|
| 1.ரகு (எ) மேட்டுர் ரகு<br>2.அரவிந்த் (எ) மச்சி அரவிந்த்<br>3.செந்தில்குமார் (எ) அரைப்பால் செந்தில்<br>4.கனகசபாபதி | |

நாள் 10.03.2026

அ சா 1 முதல் விசாரணை

நான் தற்போது திண்டுக்கலில் குடியிருந்து வருகிறேன். நான் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு சென்னிமலையில் பர்னிச்சர் கடை வைத்திருந்தேன். அந்த கடையில் என்னிடம் 3 நபர்கள் வேலை பார்த்து வந்தார்கள். எனக்கு சொந்தமான வெள்ளை நிற பொலிரோ ஜீப் TN28 AV 1905 என்ற வாகனத்தை சுமார் 5 லட்ச ரூபாய்க்கு வாங்கினேன். அந்த வாகனத்தை திண்டுக்கல்லை சேர்ந்த ஒருவரிடமிருந்து பெற்றேன். நான் வாகனத்தை வாங்கிய பின் எனது பெயரில் அதை பெயர் மாற்றிக் கொண்டேன். நான் வண்டியை கிரயம் பெற்று 4-5 ஆண்டுகள் கழித்து எனது கடையின் முன்பு ஒரு நாள் நான் வாகனத்தை நிறுத்தியிருந்தபோது இரவு சுமார் 7-8 மணியளவில் எனது வாகனத்தை யாரோ திருடி சென்று விட்டார்கள். இது சம்பந்தமாக நான் சென்னிமலை காவல நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள

கையெயோப்பம என்னுடையது தான், அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள எனது கையொப்பம் அ.த.சா.ஆ.1 ஆகும். நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது எனது வாகனம் காணாமல் போய்விட்டதாக புகார் கொடுத்தேன. அதிலுள்ள விவரங்கள என்ன என்று எனக்கு தெரியாது. எனக்கு நீதிமன்றத்தில் உள்ள ஆஜர் எதிரிகளை தெரியாது. ஒரு வாரம் கழித்து எனது கார் கண்டுபிடிக்கப்பட்டதாக போலிசார் தகவல் தெரிவித்தனர். காவல் நிலையத்தில் எனது வாகனத்தை நான் அடையாளம் காண்பித்தேன். பின்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து எனது வாகனத்தை திரும்ப பெற்று கொண்டேன். என்னிடம் காண்பிக்கப்படுவது எனது வாகனத்தின் புகைப்படங்கள். அந்த புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடு சா.பொ.1 மற்றும் 2 ஆகும்.

சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை அரசு தரப்பில் -</u>

நான் 12.09.2017 ஆம்தேதி பகல் 10.00 மணியளவில் நான் எனது கடையில் இருந்த போது மூன்று நபர்கள் எனது கடைக்கு வந்து தேக்கு மர கட்டில் புதிதாக செய்து தர வேண்டுமென்று கேட்டார்கள் என்றால் சரியல்ல. நான் இரண்டு கட்டில்களுக்கும் சேர்த்து ரூ.60,000/- மதிப்பு பெறும் என்று சொன்னேன் ் எனற ்ால் சரியல்ல. அப்போது நான் மூன்று நபர்களும் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்று கேட்டதாகவும் அப்போது உயரமாக தாடியுடன் இருந்த நபர் மேட்டுர் ரகு என்றும் உடன் இருந்தவர் பெயர் குஞ்சாண்டி ஊரை சேர்ந்த அரவிந்தன் என்றும் மற்றொருவர் பவானியை சேர்ந்த செந்தில் குமார் என்றும் சொன்னார்கள் என்றால் சரியல்ல. மீண்டும் 15.09.2017 இரவு 10.00 மணி அளவில் நான் கடையை பூட்டி விட்டு வீட்டிற்கு கிளம்பிய போது என் கடைக்கு ஏற்கனவே வந்த மூன்று நபர்கள் TN 28 AE 2600 என்ற ஸ்கார்பியோ காரில் வந்து இறங்கியதாவும் அவர்கள் காரில் இருந்து இறங்கியதும் கட்டில் ரெடியா என கேட்டார்கள் என்றும் நான் பேசிக் கொண்டேஅருகில் சென்றபோது என்னை வலுக்கட்டாயமாக தூக்கி காரில்போட்டார்கள் என்றும் அந்த காரில் சபாபதி என்ற நபர் இருந்ததாகவும் காருக்குள் வைத்து கையாலும் காலாலும் அடித்து சித்ரவதை செய்ததாகவும் அங்கிருந்து என்னை கடத்தி அத்தானி அருகே உள்ள மேவானி என்ற இடத்தில்

உள்ள முனுசாமி தோட்டத்தில் உள்ள ஒரு சிறிய ஓட்டு வீட்டில் அடைத்து வைத்ததாகவும் அங்கு வைத்து மேற்படி நபர்கள் என்னிடம் ரூ.5 லட்சம் கேட்டு மிரட்டினார்கள் என்றும் பணம் கொடுக்க மறுத்தால் குடும்பத்தை ஒழித்து விடுவோம் என்றும் மிரட்டினார்கள் என்றால் சரியல்ல. நான் பணம் இல்லை என்று சொன்னதும் அரவிந்தன் என்பவர் அரிவாளால் எனது மார்பிற்கு கீழ் வெட்டினார் என்றும் கத்தியால் விடாமல் எனது இடது கை தோள்பட்டையில் இரண்டு வெட்டும் வலது தோள்பட்டையில் ஒரு வெட்டும் வெட்டினார் என்றும் ரகு என்பவர் கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் எனது முதுகு பகுதியில் அடித்தார் என்றும் உடனிருந்த சில நபர்கள் என்னை கையால் காலால் உதைத்து கொடுமைப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் அடிப்பதை பொறுத்து கொள்ளாமல் கார் மட்டும் இருக்கிறது என்றவுடன் எனது மகனை அந்த காரை எடுத்து வரசொன்னார்கள் என்றும் நான் எனது மகனுக்கு போன் மூலம் தகவல்சொல்லி 18.09.2017 அன்று மதியம் 02.00 மணியளவில் எனது பொலிரோ காரை என் மகன் எடுத்து வந்து மேல்வானியில் உள்ள முனுசாமி தோட்டத்திற்கு வந்து நிறுத்தி விட்டு செல்லும்படி சொன்னதன் பேரில் எனது மகனும் காரை நிறுத்தி விட்டு சென்று விட்டார் என்றும் பின்னர் மேற்படி நபர்கள் எனது காரை எடுத்து கொண்டு என்னை கண்ணை கட்டி ஒரு காரில் ஏற்றி சித்தோடு பஸ்நிறுத்தத்தில் இறக்கி விடும் போது எனது கண் கட்டை அவிழ்த்து விட்டார்கள் என்றால் சரியல்ல. என்னை இறக்கி விட்டது ஸ்கார்பியோ கார் என்றும் என்னை அழைத்து வந்தவர் அரவிந்தன் மற்றும் அவருடன் இருந்த இரண்டு நபர்கள் என்றும் அரவிந்தன் எனக்கு பணம் ரூ.200/- கொடுத்து நீ போ என்று சொல்லிவிட்டு சென்றதாகவும் பின்னர் எனது கொளுந்தியா ஜெயந்தி மற்றும் மகன் மணிகண்டன் ஆகியோரை வர சொல்லி பெருந்துறை கொங்கு மருத்துவமனையில் 15 நாட்கள் சிகிச்சை எடுத்து கொண்டதாகவும் தானும் தனது குடும்பத்தாரும் பயம் மற்றும் குழப்பத்தோடு இருந்ததாகவும் மேலும் மேற்படி நபர்களால் எனக்கோ எனது குடும்பத்தாருக்கோ பிரச்சனை ஏற்படுமோ என்று பயந்து சென்னிமலை காவல் நிலையத்தில் நான் எழுத்து பூர்வமான புகாரை கொடுத்தேன் என்றும் மேற்படி புகாரை போலீசார் பெற்று வழக்கு பதிவு செய்தனர் என்றும் போலிசார் விசாரணையின் போது

எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில் இல்லை.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.03.10 16:56:50 -1000

Assistant Sessions Judge,
Perundurai.

uploaded by SS